முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

**எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

**பிலவ வருடம் ஆனி மாதம் 20ம் திகதி முதல் ஆனி மாதம் 27ம் திகதி வரை**

**(04.07.2021 ஞாயிறு முதல் 11.07.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானபூமி தமிழகம் இந்தியாவில்
   நன்மைபடைக்க அவதரித்த
   ஞான தேசிகனே ஆறுமுக அரங்கனே
   ஞான பூமிக்கு ஆசிதனை கேட்க
2. கேட்கவே அகத்தியனும் அருள்வேன்
   குறைவிலா இந்தியா தமிழகத்தில்
   திட்டமுடன் பிலவ மிதுன திங்கள்
   தக்க இருபான்திகதிமேல் இருபானேழ் திகதி வரை
3. வரை நடக்கும் வார நிகழ்வாக
   வருங்கால பலன் குறித்த ஆசியுரைப்பேன்
   மறைமுக நடுவண் தேக்கநிலை
   மாநிலங்கள் உரிமைவழி தடுத்திடா
4. தடுத்திடா சுதந்திர செயல்பாடாகி
   தாராள சேவை வளர்த்திட
   இடரான பேரிடர் துன்பமும்
   இந்தியாவை விட்டு சடுதி அகலும்
5. அகலவே தமிழக பிற மாநில
   அனைத்தும் வளர்ச்சிகள் கூடி
   செகமே வியக்க மாற்றமும்
   செல்வீக பொருளாதார ஏற்றமும் காணும்
6. காணவே தமிழக பூமியில்
   களைஎடுக்கும் முகாந்திரமாக
   ஞானமிலா ஊழல் வாதிகளுக்கு
   நலிவும் இழப்பும் அவமதிப்பும் கூடி
7. கூடியே வழக்கும் தண்டனையும்
   குறைவின்றி நீதியாக வழங்கநேரும்
   நாடியே இனி ஆளுமைகள்
   நன்னெறி மீறா நடக்க வகை புரியும்

8. வகையான தமிழக ஆளுமை
வதைக்கும் பேரிடரை வென்று
மிகையான வளர்ச்சிப் பணிகளுடன்
முன்னேற்ற வழிகளை கண்டடையும்

9. அடையவே தமிழகம் தானும்
அனைத்து பிற மாநிலங்கட்கும்
தடையின்றி வழிகாட்டும் சக்தியாக
தயவான ஆளுமையாக மாறும்

10. மாறுதல் கண்டு பொருளாதாரத்திலும்
மகத்துவம்பட இந்தியா தமிழகம் உயர
ஆறுமுக அரங்கன் ஞானவழி ஏற்க
அகத்தியன் சொல் மாறா நடந்தேறும்

வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் ஆனி மாதம் 20ம் நாள் 04.07.2021 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி மாதம் 27ம் நாள் 11.07.2021 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள்:

ஞான பூமியாகிய இந்தியா தமிழகத்தில் நன்மைகளை உண்டாக்கி மேன்மையுறச் செய்திடவே அவதரித்திட்ட ஞான தேசிகனே அரங்கமகா தேசிகனே தாம் அவதரித்திட்ட ஞானபூமியாம் தமிழகம், இந்தியதேசத்தின் எதிர்காலம் குறித்து ஆசி தனை எம்மிடம் கேட்க அகத்திய மகரிஷியானும் அருளுவேன் பிலவ வருடம் ஆனிமாதம் 20ம் நாள் 04.07.2021 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி மாதம் 27ம் நாள் 11.07.2021 ஞாயிற்றுகிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அருளுகின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நாட்டினை ஆளும் மத்திய அரசு நாட்டினில் மற்றய மாநில அரசுகள் மீது மறைமுகமாக மாநில உரிமைகளை தடுத்து தேக்கநிலை உருவாகாமல் செயல்பட்டு மாநில அரசுகளின் தேக்க நிலையை போக்கி சுதந்திரமாக செயல்பட்டிட வழிவகை செய்து மாநிலத்தின் மக்கள் சேவையை வளர்த்திட நாட்டையே உலுக்கி உயிர்பலி உண்டாக்குகின்ற இயற்கை பேரிடராம் நச்சுக்கிருமி தாக்கம் குறைந்து இந்தியா தேசத்தை விட்டே விரைந்து அகலுமப்பா.

நச்சுக்கிருமி தாக்கம் குறைந்திட தமிழகமும் பிற மாநிலங்களும் செயல்பட்டு வளர்ச்சி நிலைகள் அதிகமாகி உலகமே வியக்கும் வகையில் செல்வநிலை பெருகி அற்புதமாய் வளர்ச்சி அடையும் பொருளாதார முன்னேற்றம் உண்டாகி நல்ல முன்னேற்றங்களை அடைந்திடும்.

தமிழக அரசும் வளர்ச்சி நோக்கி செல்லும் விதத்திலே நாட்டினில் களையெடுக்கும் விதமாக ஊழல் செய்வோர்க்கு எதிரான செயல்பாடுகளை முடுக்கிவிட ஊழல் வாதிகளுக்கு நலிவும் இழப்பும் அவமானமும் அதிகமாகி அவர்களுக்கு வழங்கும் தண்டனைகளும் அதிகமாகி நீதியை

காக்கும் நல்ல  சூழல் உருவாகும். இத்தகைய உறுதிமிக்க செயல்பாடுகள் ஆளுமைகள் நன்னெறி மீறாமல் நடந்திட வழிவகை செய்திடுமப்பா. மேலும் உறுதிமிக்க இந்தவித செயல்பாடுகளினால் தமிழகத்தில் ஆட்சியும் சிறப்புடன் அமைவதோடு நாட்டை வாட்டி வதைக்கும் இயற்கை பேரிடர்களை வென்று அதிகமான வகையிலே வளர்ச்சி பணிகள் செயல்புரிந்து பல நல்ல முன்னேற்றங்களை கண்டடையும்.

ஆகவே தமிழகம் விரைந்து முன்னேறி இந்திய தேசத்தில் தமிழகம் மற்றய மாநிலங்களுக்கு முன்னோடியாக செயல்பட்டு மற்ற மாநில அரசுகளுக்கு வழிகாட்டியாக ஆகி மக்களின் ஆட்சியாக தயவுமிக்க ஆட்சியாக மாறிடும்.

நல்ல பல மாற்றங்களை கண்டு பொருளாதாரத்திலும் மேன்மையடைந்து மகத்துவம்மிக்க தேசங்களாக இந்தியாவும், தமிழகமும் உயர்ந்திட வேண்டுமாயின் ஜீவதயவையும் தர்மத்தையும் அடிப்படை கொள்கையாக கொண்ட ஆறுமுக அரங்க மகாதேசிகரின் ஞான வழிகளை ஏற்று கடைபிடித்திட எல்லா வளர்ச்சியும் உண்டாகி தேசமே உயர்வடையும். யாம் கூறும் பலன்களும் விரைந்து நாட்டில் உண்டாகும் எனக்கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–